செ.வெ.எண்:22 நாள்: 12.11.2020

**கரூர் மாவட்டத்தில் உள்ள தங்கும் விடுதிகளை ஒருங்கிணைக்க சுற்றுலா இணையதளங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சிதலைவர் அவர்கள் தகவல்**

மத்திய சுற்றுலாத்துறை சார்பில் இந்திய அளவில் அனைத்து தங்கும் விடுதிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் புதிய இணையதளம் (WWW.nidhi.nic.in) தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கரூர் மாவட்டத்தில் உள்ள தங்கும் விடுதிகளை பதிவு செய்து சுயசான்றிதழ், சுயபங்கேற்பு சான்றிதழ், சுயமதிப்பீட்டு சான்றிதழ் ஆகிய மின்னணு சான்றிதழ்கள் இணையம் வாயிலாக பெற்றுக்கொள்ளலாம். இதுதவிர கோவிட்-19 க்கு எதிராக விழிப்புணர்வு பயிற்சி தரும் வகையில் (WWW.saathi.qcin.org) என்ற புதிய இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் உள்ள தங்கும் விடுதிகள் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து தரம் மற்றும் வணிக மேம்பாடு உள்ளிட்ட ஆதாரங்களை பெற்று பயன்பெறலாம். இது தொடர்பாக மேலும் விபரங்களுக்கு சுற்றுலா அலுவலகம், கரூர் (தொலைப்பேசி எண். 04324-256257) மற்றும் உதவி சுற்றுலா அலுவலர் அலைபேசி எண் 9789630118 என்ற தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.